மந்திரவாதி
மாண்டிரிக்
தோன்றும்
ராணி
காமிக்ஸ்
மயக்கும்
மோகினி
ரூ 2

வழியைக் கண்டுபிடியுங்கள்!

தேன்கூட்டில் இருந்து புறப்பட்ட இந்தத் தேனீ, தேன் எடுக்க மலரைத் தேடி தோட்டம் தோட்டமாக சென்றது. வெகுதூரம் பறந்து வந்ததால், கூட்டிற்குச் திரும்பிச் செல்ல தேனீக்கு வழி தெரியவில்லை. உங்களுக்கு வழி தெரிந்தால் தேனீக்கு உதவுங்களேன்!



ரூ. 100 பரிசு!

உங்களுக்கு படம் வரையத் தெரியுமா?

உங்களுக்கு படம் வரையத் தெரியுமா? உங்கள் திறமையை வளர்த்துக்கொள்ள இதோ ஓர் அரிய வாய்ப்பு. உங்களுக்குள் மறைந்து கிடக்கும் ஓவியத் திறமையை வெளியே கொண்டு வந்து வளர்க்க "ராணி காமிக்ஸ்" ஒரு போட்டியை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறது.

ஒரு வெள்ளைத் தாளில் உங்கள் கற்பனை ஓவியத்தை கறுப்பு மையால் (பென்சிலால் வரையக் கூடாது.) வரைந்து அனுப்புங்கள். படத்திற்குப் பின்னால் உங்கள் பெயரையும், முகவரியையும் எழுதி அனுப்புங்கள். ஒருவர் எத்தனை படம் வேண்டுமானாலும் வரைந்து அனுப்பலாம்.

படங்களை அஞ்சல் உறையில் வைத்து, முகவரி எழுதவேண்டிய இடத்தில், இத்துடன் உள்ள முகவரியை வெட்டி ஒட்ட வேண்டும்.

ஒவ்வொரு "ராணி காமிக்ஸ்" இதழிலும் நான்கு படங்கள் தேர்ந்தெடுத்துவெளியிடப்படும். அந்தப் படங்களை வரைந்தவர்களுக்கு தலா ரூ. 25 பரிசு வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:-

ஓவியப் போட்டி,
"ராணி காமிக்ஸ்",
சென்னை-600 007.

ராணி காமிக்ஸ்–169
(மாதம் இருமுறை இதழ்)

ஜூலை 1–15
1991

மாண்டிரிக் தோன்றும்

மயக்கும் மோகினி

மந்திரவாதி மாண்டிரிக்கின்
மாஜிக் நிகழ்ச்சி
காரிங்கன் பல்கலைக்கழகத்தில்
நடக்க இருக்கிறது.
மாண்டிரிக் வருகிறார்! ஜாலிதான்!
நிகழ்ச்சி அற்புதமாக இருக்கும்!
மாண்டிரிக்கும் லோதரும் பல்கலைக்கழகத்துக்கு காரில் வந்துகொண்டிருந்தார்கள்.
காருக்கு பெட்ரோல் போட வேண்டும்!
முதலில் ஏதாவது சாப்பிட வேண்டும்!
பெட்ரோல் நிலையம்— 3 கி.மீ.
மேடம் லிலி உணவகம்— 10 கி.மீ.
இதோ, ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!
ரொம்ப நல்லது!
ஆள் நடமாட்டமே இல்லை! ஒரே பண்ணைகளாகத்தான் இருக்கின்றன!
பெட்ரோல் பங்கு இப்பொழுது வந்துவிடும்!

பெட்ரோல் பங்குக்குக் கார் வந்தது.
டேங்கை நிரப்பிவிடு! காரிங்கன் பல்கலைக்கழகம் எவ்வளவு தூரமிருக்கும்!
தெரியாது!
போன் கிடைக்குமா?
தெரியாது!
எல்லாமே தெரியாது தானா?
GAS
வயல்கள்தான் இருக்கின்றன விவசாயிகள் யாரையும் காணோமே!
விவசாயிகள் எப்பொழுதாவதுதான் வருவார்கள்!
திருட்டுப் போகாதா?
யாரும் கை வைக்க மாட்டார்கள்.
திருடர்களே இங்கே கிடையாதா?
தெரியாது.


மேடம் லிசி
உணவகம்
10 கி.மீ.
லிசி உணவகத்தில்
போன் இருக்குமா?
நல்ல உணவு
கிடைக்குமா?
தெரியாது!
தெரியாது!!
பேசாமல் இடத்தை
காலி செய்யுங்கள்! சீக்கிரம்
காரை எடுங்கள்!
GAS
ஏன்
அவசரப்படு
கிறீர்கள்!
எனக்கு வேறு
வேலை
யிருக்கிறது!
இவனிடம் போய்
கேட்டோம் பார்!
நம்மைச் சொல்ல
வேண்டும்!
இவனுக்கு
பெட்ரோல் மட்டும்
தான் போடத்
தெரியும்
போலிருக்கிறது!

இவர்கள் ஏன் அந்த உணவகத்துக்கு செல்கிறார்கள்?
மேடம் விசி உணவகம்
நமக்கு எதற்கு வீண் வம்பு!
உணவகத்துக்கு இன்னும் 10 கி.மீ. போக வேண்டும்!
லோதர் வயலைப் பார்!
மேடம் விசி உணவகம் 10 கி.மீ.
இங்கே நிறையப் பேர் வேலை செய்கிறார்கள். ஆனால் 'பெட்ரோல் போடுபவன் இங்கே யாரும் வேலை செய்ய வர மாட்டார்கள்' என்றானே!
அப்போது—
உதவி! என்னைக் காப்பாற்றுங்கள்!
ஒரு மொட்டைத் தலையன் தலைதெறிக்க ஓடிவந்தான்.

அய்யோ! என்னைக் காப்பாற்றுங்கள்!
விரட்டி வந்த இரண்டு பேர் அவனை மடக்கிப் பிடித்தார்கள்?
லோதர்! ஒருவனை இரண்டு பேர் தாக்குகிறார்கள்!
வா! அவனைக் காப்பாற்றுவோம்!
காரை நிறுத்து!
வந்தவர்கள் அவ்ளை கீழே தள்ளி ஒருவித வாயுவை சுவாசிக்க வைத்தார்கள்
உதவி! உ...த...வி!
மாண்டிரிக்கும், லோதரும் வேகமாக ஓடிவந்தார்கள்.

இங்கே என்ன
கலாட்டா?
இவனுக்கு உடல்நிலை சரியில்லை! அதனால் வைத்தியம் செய்தோம்!
உனக்கு ஆபத் இல்லையே?
கேட்கிறார் அல்லவா? சொல்!
ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை!
அவன் ஏதோ மந்திர சக்திக்குக் கட்டுப்பட்டவன் போல பேசினான்.
யார் இவர்கள்...?
இவர்களுக்கு இங்கே என்ன வேலை?

பார்ப்பதற்கு சிறைக் கைதிகள் போலிருக்கிறார்கள்! கேட்டால் ஒன்றுமில்லை என்கிறான்!
அவனை அப்படிச் சொல்ல வைத்திருக் கிறார்கள்!
கார் லிசி உணவகத்துக்கு வந்தது.
இப்பொழுது நமக்கு அது வேலையல்ல! முதலில் பல்கலைக்கழகத்துக்கு போன் செய்ய வேண்டும்!
மேடம் லிசி உணவகம்
இங்கே சாப்பிட வேண்டாமா?
வேண்டாம்! ஏற்கனவே ஒரு மணி நேரம் லேட்! அங்கே போய் பார்த்துக் கொள்ளலாம்!
நீ இங்கேயே இரு! நான் போய் போன் பண்ணி விட்டு வந்து விடுகிறேன்!
மேடம் லிசி உணவகம்
லோதர் வெளியில் காரில் காத்திருந்தான்.

மாண்டிரிக் உணவகத்துக்கு வந்தார்.
போன் பேச வேண்டும்! டெலிபோன் எங்கேயிருக்கிறது!
ஆய்...!
டெலிபோன் எங்கேயிருக்கிறது?
டெலி...?
போனா...?
டெலிபோன்தானே கேட்டேன்! ஏன் இப்படி மிரளுகிறீர்கள்?
அப்போது சன்னல் வழியே இரண்டு கண்கள் மாண்டிரிக்கைப் பார்த்தன.
வெளியே—
மாண்டிரிக்கை ஏன் இன்னும் காணோம்! சாப்பிட ஏதாவது வாங்கி வருவான்!
உள்ளே இருந்து இரண்டு பேர் அவனை நோட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள்.
உள்ளே—
சரி! பொதுத் தொலைபேசியாவது இருக்கிறதா?
பொது...?
பேசியா...?
பக்கத்தில் வேறு எங்காவது தொலைபேசி இருக்கிறதா?
குளிர்பானம் எதுவும் வேண்டுமா?

குளிர்பானம்...?
டெலி...?
போன்...?
சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல் கிறீர்கள்? உங்கள் முதலாளி எங்கே?
முதலாளி...
முதலாளி...
அப்போது—
அழகான இளமங்கை ஒருத்தி வெளியே வந்தாள்.
நான் உங்களுக்கு உதவட்டுமா?
சிரமத்திற்கு மன்னிக்கவும்! ஒரு நிகழ்ச்சிக்காக போய் கொண்டிருக்கிறேன். தாமதமாகிவிட்டது! தகவல் சொல்ல வேண்டும்!
சொல்லுங்கள்! என் அலுவலகத்துக்கு வநது பேசுங்கள்!

ரொம்ப நன்றி!
அலுவலகம் என்று சொன்னாள்! இது அவளது படுக்கை அறை அல்லவா?
பேசுங்கள்!
மாண்டிரிக் டெலிபோனை எடுத்து எண்களை சுழற்றினார்.
அலோ...! அலோ...! இதுவும் வேலை செய்யவில்லை என்று நினைக்கிறேன்!
சரி! நான் வேறு இடத்தில் முயற்சி செய்கிறேன்!

நான் யார் என்று சொல்ல வில்லையே! என் பெயா லிசி! இந்த உணவகம் என்னுடையதுதான். உங்களைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே?
என் பெயர் மாண்டிரிக்!
உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி! எனக்கு ஓர் உண்மை தெரியவேண்டும்! உங்கள் ஆட்கள் அனைவருமே கிளிப்பிள்ளைப் போல சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்கிறார்களே, ஏன்?
டெவி...?
போனா...?
பார்ப்பதற்கே விசித்திரமாக இருக்கிறது!
வாருங்கள், விவரமாக சொல்கிறேன்!
முதலில் இதைக் குடியுங்கள்! சொல்லுகிறேன்!
வேண்டாம் மேடம்!
கோப்பையில் பானத்தை ஊற்றினாள்.

சாதாரண பானம்தான்! வேறு ஒன்றுமில்லை! உட்கார்ந்து குடியுங்கள்! சொல்கிறேன்!
ஓ.கே.!
என் உணவகத்தில் பணி புரிகின்றவர்கள் அனைவரும் மன நோயாளிகள்! மனநோயாளி களை இங்கே அழைத்து வந்து அவர்களுக்கு வேலை கொடுக்கிறேன்!
டாக்டர்களும் அடிக்கடி இங்கே வந்து அவர்களுக்கு வைத்தியம் செய்வார்கள்
பரவாயில்லை! உங்கள் பணியைப் பாராட்டுகிறேன்!

மாண்டிரிக் பானத்தைக் குடித்து முடித்ததும் கோப்பையை மேசையில் வைத்துவிட்டு...
மனநோயாளிகளுக்கு வேலை கொடுப்பதே பெரிய பாக்கியம்!
சரி மேடம்! நான் புறப்படுகிறேன்!
என்ன தலை சுற்றுகிறது!
மாண்டிரிக்குக்கு திடீரென்று தலைசுற்றியது.
சாதாரண பானம்தானே குடித்தேன்!
மாண்டிரிக்! சிறிது நேரம் ஓய்வு எடுங்கள்!
அப்படியே உட்காருங்கள்!
ஆ...!
வெளியே-
போன் செய்யப் போனவனை ஏன் இன்னும் காணவில்லை?
மேடம் லிசி உணவகம்!
லோதர், மாண்டிரிக் வருகைக்காக காரில் காத்திருந்து போரடித்துப் போனது.

கொர்...! கொர்...!
மேடம் லிசி உணவகம்.
லோதர் அப்படியே காரிலேயே தூங்கிப் போனான்.
திடீரென்று லோதர் விழித்துக் கொண்டான்.
ஒரு மணி நேரமா தூங்கியிருக்கிறேன்! இன்னும் மாண்டிரிக்கை காண வில்லையே!
உடனே லோதர் உணவகத்துக்குள் வந்தான்.
மாண்டிரிக்கை எங்கே?
யார்!
யாரது?
கொஞ்ச நேரத்துக்கு முன்பு தொப்பி அணிந்த ஒருவன் போன் செய்ய வந்தானே?
போனா?
தொப்பியா?

அவனைத் தவிர வேறு யாரும் உள்ளே வரவில்லை!
வரவில்லையா?
அவன் சொன்னதையே திரும்பச் சொன்னான்.
ஆத்திரமடைந்த லோதர் அவனைப் பிடித்து உலுக்கினான்.
என்னடா கேலி செய்கிறாயா?
கேலியா?
அவனை போட்டுவிட்டு—
மாண்டிரிக்! எங்கே இருக்கிறாய்?
மாண்டிரிக்! நான் கத்துவது காதில் விழுகிறதா?
நில்! உள்ளே போகக் கூடாது!
மூன்று பேர் லோதரை வழிமறித்தனர்.

அடுத்த விநாடி– லோதர் தன் கைவரிசையைக் காட்டினான்.
கும்...!
ஆ...!
கும்...!
மொட்டைகளா? அனைவரும் சேர்ந்து சதியா செய்கிறீர்கள்?
கும்...! கும்...!
லோதர் அனைவரையும் அடித்துப் போட்டுவிட்டு அறைக் கதவை திறந்தான்.
உள்ளே போகாதே!
விடுடா!
நான் உங்களுக்கு உதவி செய்யட்டுமா?
லிசி உள்ளே இருந்தாள்.

விசி, லோதரை தன் அறைக்கு அழைத்துச் சென்றாள்.
நான் என் நண்பன் மாண்டிரிக்கை தேடி வந்தேன்!
மாண்டிரிக் இங்கு இல்லையே?
தொப்பி இங்கே இருக்கிறது!
பாதாளச் சிறையில்—
சட்டையை கழற்று!
இதை அணிந்து கொள்!
மாண்டிரிக் சுயநினைவை இழந்திருந்தார்.
மாண்டிரிக் எங்கே போயிருக்கிறார்! உண்மையைச் சொல்லுங்கள்!

பண்ணையை பார்க்கப் போவதாக சொல்லிக் கொண்டிருந் தார்
லிசி அழகாக பொய் சொன்னாள்.
அவர் எப்படி போவார்? நிகழ்ச்சிக்கு ஏற்கனவே இரண்டு மணி நேரம் லேட்!
அதற்காகத்தான் டெலிபோன் செய்ய இங்கே வந்தார்! அவர் நடிகரா? இல்லை பாடகரா?
மாண்டிரிக் நடிகரும் அல்ல! பாடகரும் அல்ல! அவர் ஒரு மாஜிக் நிபுணர்!
மாஜிக் நிபுணரா!
எப்பொழுது வருவான்?
அப்படி உட்காருங்கள்! இந்த பானத்தை குடியுங்கள்!
லிசி லோதருக்கும் அந்த பானத்தைக் கொடுத்தாள்.
அப்போது— தற்செயலாக, லோதர் சன்னல் வழியாக பக்கத்து அறையை பார்த்தான். அங்கே மாண்டிரிக்கை லிசியின் ஆட்கள் எங்கோ அழைத்துப் போனார்கள்.

மாண்டிரிக்...!
இந்தப் பக்கம் வா!
மாண்டிரிக்குக்கு என்னாச்சு? வேறு உடை உடுத்தியிருக்கிறான்!
பண்ணைக்குச் சென்ற இடத்தில் உடையெல்லாம் சேறு ஆகியிருக்கலாம்! அதனால் உடை மாற்றியிருப்பார்!
இல்லை! எனக்கு நம்பிக்கையில்லை!
இந்த பானத்தை குடியுங்கள்!
ஒருவேளை நிகழ்ச்சியில் ஏதாவது மாற்றம் செய்திருக்கலாம்! இந்தாருங்கள்!

பரவாயில்லை! நான் வருகிறேன்!
இல்லை! போகக்கூடாது!
இரண்டு தடியர்கள் லோதரை வழிமறித்தார்கள்.
போகக்கூடாது!
மன்னிக்கவும்! எனக்கு அவசர வேலை இருக்கிறது!
கும்...!
நிறுத்துங்கள்...!
அதற்குள்- மாண்டிரிக் பண்ணைக்கு கொண்டுவரப்பட்டார்.
இந்தா! பண்ணையில் இறங்கி வேலை செய்...!
வேலையா?


உணவகத்தில் லோதர் அனைவரையும் பந்தாடிக் கொண்டிருந்தான்.
நிறுத்து...! நிறுத்து...!
விடுங்கடா என்னை!
லோதர் அவர்களை தாக்கிவிட்டு நேராக பண்ணைக்கு ஓடிவந்தான்.

மாண்டிரிக்...! மாண்டிரிக்...!
மாண்டிரிக் மும்முரமாக வயலில் வேலை செய்துகொண்டிருந்தார்.

மாண்டிரிக்! இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய்! பல்கலைக்கழகத்துக்கு போக வேண்டாமா?

லோதர் மாண்டிரிக்கை பிடித்து உலுக்கினான்.
மாண்டிரிக் என்னைத் தெரியவில்லையா? உனக்கு என்னாச்சு!
மாண்டிரிக் பிரம்மைபிடித்தவர் போலிருந்தார்.
அதற்குள்– லிசி லோதரை பின் தொடர்ந்து பண்ணைக்கு வந்திருந்தாள்.
பிடியுங்கள் அவனை...!
மாண்டிரிக்! இங்கு விபரீதம் நடக்கப் போகிறது! வா ஓடிவிடலாம்!
லோதர் மாண்டிரிக்கை பிடித்து இழுக்க, அவர் அசையாமல் கல்லுப் போல நின்றிருந்தார்.
அவனை இழுத்து வாருங்கள்!
?!
லிசியின் ஆட்கள் மண்வெட்டி, சவலுடன் லோதரை சுற்றி வளைத்தார்கள்.

லோதர், மாண்டிரிக்கை அழைத்துக் கொண்டு வேகமாக காருக்கு வந்தான். பின்னால் மொட்டையர்கள் விரட்டி வந்தார்கள்.
அனைவரும வாருங்கள்!
Fine foods
நில்!
இவனைப் பிடித்து நிறுத்துங்கள்!
நில்!
அனைவரும் ஒட்டுமொத்தமாக சேர்ந்து லோதரை பிடித்தார்கள்.
மாண்டிரிக்! காப்பாற்று!
லோதரை கீழே தள்ளினார்கள்.
இரும்புச் சங்கிலியால் அவனைக் கட்டிப் போடுங்கள்!

மாண்டிரிக்!
லோதரை சங்கிலியால் கட்டிப் போட்டார்கள்.
இதை குடி....!
வேண்டாம்....!
ஒருவன் பானத்தை நீட்டினான்.
குடிடா....!
வேண்டாம்....!
லோதர் முரண்டு பிடித்தான். முகத்தை பிடித்து பானத்தை வாயில் ஊற்றினார்கள்.
இவன் உன்னுடைய நண்பன்தானே! இதைக் குடிக்கச் சொல்....!
குடி....!
லிசி மாண்டிரிக் கிடம் பானத்தைக் கொடுத்து அனுப்பினாள்.
இந்தா இதைக் குடி!
மாண்டிரிக்! இதில் மயக்க மருந்து கலந் திருக்கிறது!
மாண்டிரிக் அதை புரிந்துகொள்ளவில்லை.

இது விஷம்!. கொட்டிவிடு!
உடனே மாண்டிரிக் பானத்தை கீழே கொட்டினார்.
கொட்டிவிட்டேன்!
அதைப் பார்த்து ஆத்திரமடைந்த லிசி மாண்டிரிக்கை தாக்கினாள்.
முட்டாள்! விலகிப்போ!
அவனுக்கு பானம் வேண்டாம்! இந்த ஊசி போதும்!
லிசி ஊசியை கொண்டு வந்தாள்.
லோதரின் உடலில் ஊசியை குத்தினாள்!
இனி சங்கிலியை அவிழ்த்து விடுங்கள்!

இப்போது இவன் யார் என்று தெரிகிறதா?
தெரியவில்லை!
தெரியவில்லை!
லோதரும் மற்றவர்களைப் போல சுயநினைவை இழந்தான்.
என்னிடம் யாருமே தப்பியதில்லை! இவனுக்கு நம் உடையை கொடுங்கள்!
உடனே மாண்டிரிக் லோதரை அழைத்துச் சென்றார்.
மேடம்
அதேநேரம் பல்கலைக்கழகத்தில்-
ஐந்து மணி நேரம் ஆகிவிட்டது! மாண்டிரிக்கை இன்னும் காணவில்லையே!
அவர் வீட்டில் தொடர்பு கொண்டால் என்ன?
பல்கலைக்கழகம்
மாண்டிரிக்கும், லோதரும் காலையிலேயே போய்விட்டார்களே!

அவர் இங்கு வர வில்லையே?
வழியில் கார் ரிப்பேர் ஆகிவிட்டதா?
கடவுளே! விபத்து ஏற்பட்டிருக்க கூடாது!
வீட்டில் மாண்டிரிக்கின் மனைவி நர்தாவும், லோதரின் மனைவி கர்மாவும் இருந்தார்கள்.
இருவரும் வீட்டை விட்டுப் போய் 6 மணி நேரம் ஆகிவிட்டது. போன்கூட செய்யவில்லை!
வராமல் இருக்க மாட்டாரே!
காரில் கோளாறு ஏற்பட்டு இருக்குமா?
இல்லை! விபத்து ஏதாவது...!
இல்லை மேடம்! இதுவரை எந்தவிதமான விபத்தும் ஏற்படவில்லை!
நர்தா போக்குவரத்துதுறை கமிசனரிடம் விசாரித்தாள்.

ஏன் அவர்கள் போன் செய்யவில்லை!
ஒருவேளை ஆபத்தில் சிக்கியிருப் பார்களோ!
மாண்டிரிக் இந்த வழியாகத்தான் பல்கலைக் கழகத்துக்கு செல்வதாக சொன்னார்!
கார் ரிப்பேர் ஆனாலும், தகவல் சொல்ல அருகில் டெலிபோன் வசதி கிடையாது!
வரை படத்தை எடுத்து பார்த்தார்கள்.
உடனே இருவரும் காரில் புறப் பட்டார்கள்.
அவர்கள் சென்ற வழியிலேயே நாமும் செல்வோம்!
இந்த திருப்பத்தில் திரும்பு! இதுதான் பல்கலைக்கழகத்துக்கு செல்லும் வழி!

வழியில் காருக்கு பெட்ரோல் போட்டார்கள்.
இரண்டு பேர் இந்த வழியாக காரில் போனார்களா?
ஆமாம்! இங்கே பெட்ரோல் போட்டுக் கொண்டுதான் சென்றார்கள்!
எதுவும் உதவி கேட்டார்களா?
டெலிபோன் கிடைக்குமா என்று கேட்டார்கள்!
இப்படியே போனால் லிசி உணவகம் வரும்! அங்கே கேட்டு பாருங்கள் என்றேன்!
ரொம்ப நன்றி!
வழியில் காரை நிறுத்தி விசாரித்தார்கள்.
மேடம் லிசி உணவகம் எவ்வளவு தூரம் இருக்கும்!
என்ன? கேட்டால் பதிலே இல்லை!
லிசியின் ஆட்களிடமே லிசியைப் பற்றி விசாரித்தார்கள்.

இருவரும் ஓரே மாதிரி உடை அணிந்திருக் கிறார்கள்!
சிறைக் கைதிகளாக இருக்கும்!
ஏன் மன நோயாளியாக கூட இருக்கலாம்!
அப்படியா?
இதோ லிசி உணவகம்!
ஒரு வழியாக உணவகத்தை கண்டு பிடித்துவிட்டோம்!
கார் சத்தத்தைக் கேட்டு லிசி சன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள்.
கர்மா! இங்கேயே இரு! நான் போய் விசாரித்து வருகிறேன்!
மேடம் லிசி, உணவகம்!
சரி!

நர்தா உள்ளே வந்தாள்.
உங்களை மாதிரியே இரண்டு பேரை வழியில் பார்த்தேன்! உங்கள் நண்பர்களா?
நண்பர்களா?
நண்பர்களா?
சொன்னதையே திருப்பிச் சொன்னார்கள்.
டெலிபோன் கேட்டு இரண்டு பேர் இங்கே வந்தார்களா?
ஒருவர் வெள்ளையாகவும் இன்னொருவர் கறுப்பாகவும் இருப்பார்!
கறுப்பா
வெள்ளையா?
நான் உங்களுக்கு உதவட்டுமா?
சரி!
லிசி வெளியே வந்தாள்.
இன்றைக்கு டெலிபோன் கேட்டு இரண்டு பேர் வந்தார்களா?
இங்கே தினமும் நிறையபேர் வருகிறார்கள்!

ஒருவர் வெள்ளையாக இருப்பார். தொப்பி போட்டிருப்பார். இன்னொருவர் கறுப்பாக வாட்ட சாட்டமாக இருப்பார்!
அப்படி யாரும் வந்ததாக நினைவில்லையே!
இல்லையா? அருகில் ஏதாவது விபத்து நடந்ததாக கேள்விப் பட்டீர்களா?
இல்லையே!
உணவகத்துக்கு வெளியே—
நர்தா வருவதற்குள் உணவகத்தை ஒரு சுற்று சுற்றி வருவோமே!
மேடம் லிசி உணவகம்
கர்மா காரில் இருந்து இறங்கினாள்.
உணவகத்தை சுற்றி வந்தாள்.

ஓர் இடத்தில்...
இங்கே...!
திடீரென்று கர்மா அதிர்ச்சியடைந்தாள்.
உள்ளே-
மன்னிக்கவும்! வீணாக உங்களுக்கு தொந்தரவு கொடுத்துவிட்டேன்!
அதெல்லாம் ஒன்றுமில்லை!
நர்தா காருக்கு வந்தாள்.
இருவரும் இங்கே வர வில்லையாம்!
நர்தா! என்னுடன் வா!
கர்மா, நர்தாவை உணவகத்துக்கு பின்னால் அழைத்துப் போனாள்.
இது மாண்டிரிக்கின் கார்...!
அங்கே மாண்டிரிக்கின் கார் அனாதையாக நின்றுகொண்டிருந்தது.

கார் இங்கு நிற்கிறது! ஆனால் அவர்கள் வரவில்லை என்று லிசி சொல்லுகிறாள்!
அவள் பொய் சொல்லுகிறாள்!
ஒருவேளை காரை இங்கே நிறுத்திவிட்டு வெளியே எங்கும் போயிருப் பார்களோ!
அதற்கு சந்தர்ப்பமே இல்லை!
லிசி அவர்களுடைய பேச்சை ஒட்டுக்கேட்டாள்.
கர்மா! இங்கே ஏதோ அசம்பாவிதம் நடக்கிறது! லிசியும் அவளுடைய ஆட்களும் சதி செய்கிறார்கள்!
வா! நாம் முதலில் இங்கிருந்து தப்பிப்போம்!

இருவரும் தங்களுடைய காருக்கு ஓடினார்கள்.
ஏய்...! அவர்களை பிடியுங்கள்!
லிசி தன் ஆட்களுக்கு கட்டளையிட்டாள்.
இருவரும் காரில் ஏறி காரை கிளப்புவதற்குள் தடியர்கள் அவர்களை நோக்கி ஓடிவந்தார்கள்.
அவர்களை பிடியுங்கள்!
!
!
நர்தா! சீக்கிரம் காரை எடு...!
அய்யோ இந்த நேரத்தில் என்ஜின் கோளாறு பண்ணுகிறதே!
தடியர்கள் காரை நெருங்குவதற்கும் தெய்வாதீனமாக கார் கிளம்புவதற்கும் சரியாக இருந்தது.

முட்டாள்கள்! கோட்டை விட்டு விட்டீர்களே!
அவர்கள் எல்லாம் அடியாட்களா?
இல்லை... அவர்களுக்கு சுயநினைவே இல்லை!
மாண்டிரிக்கும், லோதரும் அங்கே வரவில்லை என்கிறாள். ஆனால் அவர்கள் கார் அங்கு நிற்கிறது!
மேடம் லிசி உணவகம்!
ஏன் இப்படி பொய் சொல்கிறாள்! யார் அவள்?
வா! போலீசுக்குச் சொல்வோம்!
நர்தாவின் கார் சாலையில் சீறிப் பாய்ந்து வந்துகொண்டிருந்தது.
அதோ அவர்கள் லிசியின் ஆடகள்! பண்ணையில் வேலை செய்துவிட்டு போகிறார்கள்!.
இவர்களும் மன நோயாளிகள்தான்!

அவர்கள் சாலையை கடக்கட்டும்!
வண்டியை பிறகு எடுப்போம்!
நர்தா வண்டியை நிறுத்தினாள்
அந்தக் கூட்டத்தில் மாண்டிரிக்கும், லோதரும் இருந்தார்கள்.
அனைவரும் சாலையை கடந்தார்கள்.
மாண்டிரிக்கையும், லோதரையும் எங்கே போய் தேடுவது?
செம்மறி ஆட்டு மந்தை போல் அல்லவா செல்கிறார்கள்!
கர்மா? அங்கே பாரேன்....
பார்த்ததும் இருவரும் அதிர்ச்சி அடைந்தார்கள்.

மாண்டிரிக்...!
லோதர்...!
இருவரும் மாண்டிரிக்கையும் லோதரையும் கண்டார்கள்.
மாண்டிரிக்... நான் நர்தா!
லோதர்...! லோதர்...!
அவர்கள் சுயநினைவில் இருந்தால்தானே அவர்கள் கத்துவதை கேட்க முடியும்!
நாம் கத்துவது அவர்கள் காதில் விழவில்லையா?
அதற்குள்—
கர்மா! அதோ அவர்கள் நம்மை விரட்டி வருகிறார்கள் பார்!

அதற்குள் நர்தா காரை கிளப்பினாள்.
இருவரையும் கண்டுபிடித்து விட்டோம்!
ஆமாம்! அவர்களுடன் இவர்களுக்கு என்ன வேலை!
இருவரும் அவர்களைப் போல சுயநினைவை இழந்துவிட்டார்கள் ஒரே குழப்பமாக இருக்கிறது!
இருவரும் காவல் நிலையம் வந்தார்கள்.
சார்! இரண்டு பேரை காணவில்லை!
அவர்கள் காணாமல் போகவில்லை! கடத்திச் சென்றுவிட்டார்கள்!
கடத்திவிட்டார்களா? உண்மையா?
ஆமாம்! இருவரும் மேடம் லிசியிடம்தான் இருக்கிறார்கள்!
அங்கு இருந்தால், உடனே லிசிதான் அவர்களை கடத்திச் சென்றுவிட்டார்கள் என்று அர்த்தமா?

லிசிதான் அவர்களை கடத்தியிருக்கிறாள். பிறகு ஏன் அவள் பொய் சொல்ல வேண்டும்!
நான் உங்கள் ரிப்போட்டை எடுத்துக்கொள்ளப் போவதாக இல்லை!
ஏன்?
இதில் சந்தேகப்படும் படியாக எதுவும் இல்லையே!
உங்களுக்குள் இருக்கும் சண்டை மறந்துவிட்டு சமாதானமாக போங்கள். அதை விட்டுவிட்டு இப்படி யெல்லாம் ரிர்போர்ட் செய்யாதீர்கள்!
சார்! இது உண்மை
அவர்கள் கார் அங்கே நிற்கிறது! லிசியின் பண்ணையில் அவர்கள் வேலை செய்துவிட்டு வருவதைகூட பார்த்தோம்!
அத்தனையும் உண்மை!
இங்கே பாருங்கள்! லிசியை எனக்கு நன்றாக தெரியும்! அவர்கள் அப்படியெல்லாம் செய்ய மாட்டார்கள்!

லிசி மனநோயாளிகளை அழைத்து சிகிச்சை அளித்து அவர்களுக்கு வேலை கொடுக்கிறார் உங்கள் கணவர்மார்களும் மனநோயாளிகளா?
இல்லை!
POLICE
இது அபத்தமான பொய்!
மனநோயாளிக்குத்தான் அவருடைய பண்ணையில் வேலை கொடுக்கிறார்!
இதுதான் உண்மைக் கதை!
உண்மை இல்லை! வா போகலாம்!
லிசி உணவகத்தில் ஏதோ மர்மம் மறைந்து இருக்கிறது!
நாங்கள் பார்த்தோம்! நீங்கள் மறுக்கிறீர்கள்!
போய் ஆதாரத்தை கொண்டு வாருங்கள்!

எனக்கு நிறைய வேலை இருக்கிறது!
!!
நர்தாவும், கர்மாவும் வெளியே வந்தார்கள். அப்போது ஒருவன் அங்கே பைக்கில் வந்தான்.
கமிசனரை நம்பி இனி பிரயோஜனம் இல்லை!
பாவம் மாண்டிரிக்கும், லோதரும். அங்கே எப்படி கஷ்டப்படுகிறார்களோ!
கர்மா! இப்போது ஒருவன் பைக்கில் வந்தானே அது யார் தெரிகிறதா?
லிசியின் ஆள் போலத் தெரிகிறது!
லிசியிடம் இருக்கும் ஆட்களை அதட்டி வேலை வாங்கிக் கொண்டிருந்தவன்தான் இவன்.
இவன் எதற்கு கமிசனரை சந்திக்கப் போகிறான்! கையில் பெட்டி வேறு வைத்திருக்கிறான்!

கர்மா, இரு! இதோ வருகிறேன்!
நர்தா! பார்த்து செயல்படு!
நர்தா காரில் இருந்து இறங்கி ஓடினாள்.
ஏன் இவ்வளவு நேரம்?
கொஞ்சம் வேலை அதிகம்!
பெட்டி கைமாறியது. நர்தா மறைந்திருந்து அவர்களை நோட்டமிட்டாள்.
கொஞ்சம் இரு! பணத்தை எண்ணிப் பார்த்துக்கொள்கிறேன்! போனமுறை ஏமாற்றிவிட்டீர்கள்!
WANTED
நாங்கள் ஒன்றும் ஏமாற்றவில்லை!
சரி பரவாயில்லை! அடுத்த வாரம் சீக்கிரமே பணத்தை கொண்டுவந்துவிடு!
பெட்டி நிறைய பணம் இருந்தது.
என்ன நர்தா?
கர்மா! இனிதான் நமக்கு நிறைய வேலையிருக்கிறது
நர்தா காருக்கு ஓடிவந்தாள்.

கமிசனருக்கு விசி பெட்டி நிறைய பணம் கொடுத்து அனுப்பியிருக்கிறாள்!
மாண்டிரிக்கையும், லோதரையும் எப்படிக் காப்பாற்றுவது?
விசியிடமே சென்று ஏதாவது உதவி கேட்போம்!
THRIFT SHOP
மீண்டும் அந்த இடத்திற்குப் போவதா?
போனால்தான் உண்மையை கண்டுபிடிக்க முடியும்!
அப்பொழுதான் மாண்டிரிக்கையும், லோதரையும் காப்பாற்ற முடியும்!

நர்தா, கர்மாவை ஒரு கடைக்கு அழைத்து வந்தாள்.
நர்தா! நன்றாக யோசித்து விட்டாயா?
நான் ஒரு அருமையான திட்டம் வைத்திருக்கிறேன்!
இந்த உடையை எடுத்துக் கொள்ளலாம்!
அப்படியே வயதைக் காட்டக்கூடிய டோபா இரண்டு வேண்டும்!
சரி தருகிறேன்!
நர்தா! எதற்காக இந்த பழைய துணிகள்!
மாறுவேடத்தில் லிசியின் இடத்திற்கு போகிறோம்!
எனக்கு இந்த பழைய துணி வேண்டாம் நர்தா!
பழையது தான்! ஆனால் சுத்தமானது! அணிந்துகொள்!
டோபாவை வேறு அணிய வேண்டுமா?
முகத்திலும் கரியை அப்பிக் கொள்ள வேண்டும்! அய்யோ!

இருவரும் மாறுவேடத்தில் லிசி உணவகத்துக்கு சென்றார்கள்.
நர்தா! எனக்கு பயமாக இருக்கிறது!
பயப்படாதே! நான் இருக்கிறேன்!
கதவு திறந்தது.
எங்களுக்கு ஏதாவது வேலை கொடுங்களேன்!
பிச்சைக்காரர்களை எல்லாம் நாங்கள் உள்ளே விடுவதில்லை!
நாங்கள் பிச்சைக்காரர்கள் இல்லை! நன்றாக வேலை செய்வோம்!
அப்போது— லிசி அங்கே வந்தாள்.
என்ன வேலை செய்யத் தெரியும்!
தரையை கூட்டுவோம்! பாத்திரம் கழுவுவோம்!
பீமா! இவர்களை அழைத்துச் சென்று ஏதாவது வேலை கொடு!

என் பின்னே வாருங்கள்!
முதலில் சாப்பாடு போடுங்கள்!
ம்...ஊகூம்! முதலில் வேலை!
இருவரும் தரையை சுத்தம் செய்தனர்.
விரைவில் வேலையை முடியுங்கள்!
பண்ணையில் இருந்து ஆட்கள் வரும் நேரம்!
லோதர்...!
மாண்டிரிக்...!
பண்ணையில் இருந்து மாண்டிரிக்கும் லோதரும் திரும்பினார்கள்.

பீமா! அனைவருக்கும் இந்த பானத்தை குடிக்கக் கொடு!
எல்லாருக்கும் பானம் கொடுக்கப்பட்டது.
மாண்டிரிக்கும், லோதரும் கூட பானத்தை வாங்கி 'மடக் மடக்' என்று குடித்தார்கள்.
நர்தாவும், கர்மாவும் மறைந்திருந்து நோட்டமிட்டார்கள்.
அனைவரும் குடித்து விட்டீர்களா?
ஆமாம்...!
ஆ...!
ஒருவன் மட்டும் பானத்தை குடிக்காமல் கீழே தவறவிட்டான்.

அவன் குடிக்கவில்லை! விடாதே! எப்படியாவது குடிக்கவை!
அவனை நாலைந்து பேர் பிடிக்க, பானத்தை வாயில் ஊற்றினார்கள்.
இனி நீங்கள் தூங்கப் போகலாம்!
தூக்கம்...! தூக்கம்...!
அனைவரும் சென்றதும், நர்தாவும், கர்மாவும் படுக்கை அறைக்குச் சென்றார்கள்.
வா! அவர்களை பார்ப் போம்!
மாண்டிரிக்! நான் நர்தா வந்திருக்கிறேன். கொஞ்சம் பாருங்களேன்.
லோதர்!
தூக்கம்...!
தூக்கம்...!

அப்போது ஓர் உருவம் கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தது.
ஏய்...! இங்கே என்ன செய்துகொண்டு இருக்கிறீர்கள்!
பீமாதான் உள்ளே வந்தான்
அறையை சுத்தம் செய்துகொண்டிருக்கிறோம்!
முட்டாள்! உங்களை யார் இங்கே வரச் சொன்னது!
பேசாமல் சாப்பிட்டு விட்டு இந்த அறையில் படுங்கள்!
சொல்லிவிட்டு பீமா சென்றுவிட்டான்.
கர்மா! இங்கே என்ன நடக்கிறது என்று சுற்றிப் பார்ப்போம் வா!

ஓர் அறையில்—
இன்றைக்கு கொடுத்த பானத்தில் மருந்து குறைந்துவிட்டது! அதனால் இதில் அதிகமாக சேர்க்க வேண்டும்!
விசி குடுவையில் இருந்த மருந்தை பானத்தில் ஊற்ற, பீமா அதை கலக்கிவிட்டான்!
மறுநாள் காலை—
டங்...! டங்...! டங்... டங்...
வாருங்கள்! பானம் குடிக்கலாம்!
பானம்...!
பானம்....
அனைவரும் எழுந்திருங்கள்!
அய்யோ இவர்களும் குடிக்கிறார்களே!
நர்தா மறைந்திருந்து பார்த்தாள்!

பானம் என்று சொல்லி மயக்க மருந்தை குடிக்க வைத்து, சுயநினைவை இழக்கச் செய்துவிடுகிறாள்!
!
அடுத்த வேளைக்கு பானம் தயாரானது!
நாளைக் காலையில் இதைக் கொடு!
விசி போனதும் நர்தாவும், கர்மாவும் அந்த அறைக்குள் நுழைந்தார்கள்.
உஷ்...!
உள்ளே போய் பானத்தை திறந்து பார்த்தார்கள்.
இதைத்தானே எல்லோருக்கும் குடிக்க கொடுக்கிறார்கள்!
இதோ இதில் உள்ள மருந்துகளைத்தான் தண்ணீரில் கலக்கிறார்கள்!

இதைத்தான் ஒரு நாளைக்கு இரண்டு வேளை குடித்து சுயநினைவை இழக்கிறார்கள்!
அடப் பாவமே!
நாம் இப்போது என்ன செய்வது?
கர்மா! நம்மை அடையாளம் காணுவதற்குள் விரைவாக செயல்படவேண்டும்!
சாதாரண தண்ணீர் போலத்தான் இருக்கிறது:
ஆனால் அவ்வளவும் விஷமாயிற்றே!
லிசி கலக்கி வைத்திருந்த பானத்தை கீழே கொட்டினார்கள்.
பிறகு வெறும் தண்ணீரை மட்டும் ஜாடியில் நிரப்பி வைத்தார்கள்.
பீமா அவர்களை பார்த்தான்.
முட்டாள்கள்!

கிழட்டு நாய்களே! இங்கே என்ன செய்கிறீர்கள்?
ஜாடியை கழுவி வைத்தோம்!
ஆங்.... ஆ...!
உடனே கர்மா துடைப்பானை வைத்து பீமாவை தாக்கினாள்.
அடிபட்ட பீமா மயங்கி விழுந்தான்.
என்ன கனமாக இருக்கிறான்!

சீக்கிரம் உள்ளே இழுத்துப் போடு! இறுக்கமாக கட்டிப் போடு!
சரி!
நர்தா! அதோ அவர்கள் பண்ணையில் இருந்து வந்து விட்டார்கள்!
வந்தவுடன் லிசி பானத்தை குடிக்க கொடுப்பாள்!
பானம் கொடுக்க வேண்டும்! பீமா எங்கே போனான்!
மேடம்! நாங்கள் உதவி செய்கிறோம்!
ஒருவரையும் விட்டுவிடக் கூடாது! கவனமாக கொடு!
கர்மாவும், நர்தாவும் அனைவருக்கும் பானத்தை கொடுத்தார்கள்.
குடியுங்கள்! குடியுங்கள்! குடியுங்கள்!

அனைவரும் பானத்தை 'மடக் மடக்'கென்று குடித்தார்கள்.
பரவாயில்லை! இருவரும் நன்றாக வேலை செய்கிறீர்கள்!
ரொம்ப நன்றி மேடம்!
இரவில்–
மாண்டிரிக்...!!
லோதர்...!
கொர்...!
கொர்...!
மாண்டிரிக்! தயவுசெய்து எழுந்திருங்கள்!
லோதர்! என்ன தூக்கம் இது?

காலையில் கொடுக்க பானம் தயாரிக்க வேண்டும்! பீமா எங்கே போனான்! தெரிய வில் லையே!
லிசி பீமாவை தேடினாள்.
அந்த அறையில் பீமா கட்டுண்டு கிடப்பதை ஒருவன் பார்த்தான்.
ம்ம்ம்...!
பீமா...!
பீமா குடித்துவிட்டு எங்கேயாவது விழுந்து கிடப்பான்! பாருங்கள்!
இல்லை மேடம்! அவனை கட்டிப் போட்டிருக்கிறார்கள்!
இதோ இந்த இரண்டு கிழவிகளும்தான்!
யார் அவனை கட்டிப் போட்டது?
கர்மாவையும், நர்தாவையும் இழுத்து வந்து லிசி முன் நிறுத்தினார்கள்.

ஆ...! டோப்பா! நீங்கள் இருவரும் நேற்று இங்கே வந்தவர்கள் தானே!
லிசி அவர்கள் மாறுவேடத்தை கலைத்தாள்!
துப்பறிய இங்கே வந்தீர்களா? யார் உங்களை அனுப்பியது?
நாங்களாகத்தான் வந்தோம்.
என் திறமையை பார்த்தீர்களா? முரடர்களை கொண்டுவந்து மயக்கி என் பண்ணையில் வேலை செய்ய வைத்திருக்கிறேன் எப்படி?
இவர்களுக்கும் பானத்தை கொடு!


ம்...! குடி...!
குடி...!
வேண்டாம்!
பானத்தை நர்தாவையும் கர்மாவையும் குடிக்க வைக்க முயன்றார்கள்

இரு! நான் பிடித்துக்கொள்கிறேன்! பிறகு ஊற்று!
மாண்டிரிக்!
லோதர்...!
இருவரும் காட்டுக் கத்தல் கத்தினார்கள்.


அடுத்த அறையில் இருந்த மாண்டிரிக்கும், லோதருக்கும் தன்னை யாரோ கூப்பிடுகிறார்கள் என்பது புரிய ஆரம்பித்தது.
மாண்டிரிக்...!
லோதர்...!
சுயநினைவு கொஞ்சம் கொஞ்சமாக திரும்பியது.

எங்களை விட்டுவிடுங்கள்! மாண்டிரிக்...!
லோதர்...!
கும்...!
அப்போது– பின்னால் இருந்து லோதர் தடியர்களை பிடித்து உலுக்கினான்
என்னடா இதெல்லாம்...!
விசி லோதரை பார்த்து அதிர்ச்சியடைந்தாள்
நல்லவேளை லோதர்! சரியான நேரத்தில் வந்தாய்...!
யார் இந்த தடியர்கள்?
படார்...!

திடீர் திருப்பம் ஏற்பட்டதும் விசி ஓட்டம் பிடித்தாள்.
அங்கே வந்த மாண்டிரிக் தன் மந்திர சக்தியால் விசியை அந்தரத்தில் நிறுத்தினார்.
நில்!
நர்தா! என்ன நடந்தது? நாம் எங்கேயிருக்கிறோம்!
மாண்டிரிக்! இரண்டு நாளாக நீங்கள் மயக்கத்தில் இருந்தீர்கள்!
மயக்கமா?
ஆமாம்...! நீங்களும்தான்!
என்ன நடந்தது? யோசித்துப் பார்க்கிறேன்!
இதோ இவள்பானத்தை குடிக்க வைத்து, உங்கள் சுயநினைவை இழக்கச் செய்துவிட்டாள்!

இதோ! இவர்கள் அனைவரும் பாதிக்கப்பட்டவர்கள்தான்!
?
நான் எங்கே யிருக்கிறேன்?
இது எந்த இடம்?
ஒருமுறை பானம் குடிக்காததால் அனைவரும் சுயநினைவை அடைந்தார்கள்.
காலை– மாலை என்று இரண்டு முறை இந்த பானத்தை குடிக்க வைத்தார்கள்!
நேற்று இரவு நானும், கர்மாவும் பானத்தை கொட்டிவிட்டு, வெறும் தண்ணீரை பிடித்து வைத்து விட்டோம்!
இவளை சும்மா விடக்கூடாது! நாங்கள் அடிமைகளா? கொல் அவளை!
பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் கொதித்தெழுந்தார்கள்.

நில்லுங்கள்! இவளை சட்டத்தின் கையில் பிடித்துக் கொடுத்துவிடுவோம்!
ஏய் இங்கே வா! நீ யார் என்ற உண்மையைச் சொல்!
சொல்! இல்லை இவர்கள் அடித்தே கொன்று விடுவார்கள்!
இல்லை. சொல்ல மாட்டேன்!
சொல்லிவிடுகிறேன்! நான் ஒரு விலங்கியல் மாணவி!
அதிக பலங்கொண்ட மிருகங்களை சாதுவாக்கி விடக்கூடிய மருந்து ஒன்றை கண்டுபிடித்தேன்! அதை விலங்குகளுக்கு கொடுத்து சோதனை செய்தேன்!

வெற்றியும் கண்டேன்! பிறகு அதை முரட்டு மனிதர்களுக்கு கொடுத்துப் பார்த்தேன்!
பில்...! தலைகீழாக நில் பார்ப்போம்!
சொன்னதையெல்லாம் மனிதர்கள் செய்தார்கள்! அதனால் ஒரு பெரிய திட்டம் போட்டேன்!
அதிலிருந்து பார்க்கிற முரடர்களை எல்லாம் அடிமையாக்கினேன்!
அப்போது— கமிசனர் அங்கே வந்தார்.
மேடம்! என்ன இது!
சார்! இதோ இவர்கள் என்னை கொல்லப் பார்க்கிறார்கள்! காப்பாற்றுங்கள்!
லிசி நாடகமாடினாள்.
கமிசனர்! பொறுங்கள்! அவள் பொய் சொல்கிறாள்!

அசையாதீர்கள்! பெண்கள் இருவரும் இந்தப் பக்கம் வாருங்கள்!
கமிசனர் அனைவரையும் துப்பாக்கி முனைக்கு கொண்டுவந்தார்.
மேடம்! முதலில் இந்தப் பெண்கள் இருவரையும் கைது செய்கிறேன்!
ஓ.கே.!
டேய்! அவளிடம் பணத்தை வாங்கிக்கொண்டு எங்களை கைது செய்கிறாயா?
கமிசனர்! வேண்டாம்!
பேசாதே...! போ! இல்லை சுட்டுவிடுவேன்!
துப்பாக்கி உன்னிடம் இருந்தால் தானே சுடுவாய்!
மாண்டிரிக் மந்திர சக்தியை உபயோகித்து துப்பாக்கியை பறித்தார்.

© King Features Syndicate, Inc., 1968. World rights reserved.

இரண்டு ஜோடிகளும் ஒன்றுசேர்ந்தனர்.
ஆண்களின் உயிரைக் காப்பாற்றிய வீராங்கனைகளுக்கு எங்கள் நன்றி!
அப்படியா? பலே!
மறுநாள் பத்திரிகையில்—
பண்ணைகளை அபகரித்த பெண் கைது!
போதை மருந்து கலந்து ஆண்களை மயக்கினாள்!
இரண்டு நாள் தாமதமானாலும் பல்கலைக்கழகத்துக்கு போயே தீரவேண்டும்!
அவர்கள் நமக்காக காத்திருப்பார்களா?
குறிப்பிட்ட நேரத்தில் நீங்கள் வராததற்கு ஆன காரணத்தை பத்திரிகையில் பார்த்தேன்!
மன்னித்துக் கொள்ளுங்கள்! நிகழ்ச்சி தொடங்குவோமா?
முடிந்தது

ரூ. 500 பரிசு!

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களை உற்றுப் பாருங்கள். அவற்றின் பெயர்களில் இருந்து ஓர் எழுத்தை மட்டும் எடுத்து ஒன்று சேருங்கள். கவிஞர் ஒருவர் கிடைப்பார். யார் அவர்? கண்டுபிடிப்பவர்களுக்கு ரூ. 500 பரிசு காத்திருக்கிறது!

அதனை யாராவது ஒன்றாக (பேனாவால் மட்டும்) ஒரே அஞ்சலட்டையில் எழுதி அனுப்புங்கள். முகவரி எழுதவேண்டிய இடத்தில், இந்த பக்கம் உள்ள முகவரி கட்டத்தை வெட்டி ஒட்டவேண்டும்.

சரியான விடை எழுதியவருக்கு, ரூ. 500 பரிசு கொடுக்கப்படும்! பலபேர் சரியான விடை எழுதியிருந்தால், பரிசுக்கு உரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்து எடுக்கப்படுவார்கள்.

முடிவு தேதி: 13-7-91.

அனுப்ப வேண்டிய முகவரி:-

கண்டுபிடி புதிர்கள் - 31

கண்டுபிடி புதிர்கள்,
"ராணி காமிக்ஸ்",
சென்னை-600 007.

பரிசு பெற்றவர்கள்:-

ஜூன் 1ந்தேதி வெளியான "ராணி காமிக்ஸ்" கண்டுபிடி புதிர்கள் போட்டியின் விடை :- கன்னியாகுமரி.

ஆயிரக்கணக்கானோர் சரியான விடை எழுதியிருந்தனர். பரிசுக்குரிய 25 பேரை குலுக்கல் முறையில் தேர்ந்து எடுத்தோம்.

பரிசுத்தொகை ரூ. 500. ஆளுக்கு ரூ. 20 வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டது.

பரிசு பெற்றவர்கள்:-

(1) எஸ். கஸ்தூரி, சென்னை-20. (2) பி. அருணாசலமூர்த்தி, இலஞ்சி. (3) ஜேசுமலர், பாளையஞ்சேரி. (4) ஜி. அசிக்குமார், சித்தூர். (5) பி. செந்தில்வேல், மதுரை-16.

(6) எஸ். கஸ்தூரி, கன்னிவிளை. (7) கே. தங்கதுரை, கொடுமுடி. (8) ஆர். நாகேஸ்வரி, சேலம்-10. (9) அ. மோகன்ராஜ், புதுக்கோட்டை. (10) ஆர். பாலேஸ்வரி, விழுப்புரம்.

(11) பி. சந்திரசேகர், கொத்தங்குடி. (12) கே. வசந்தகுமார், மணக்குடையான். (13) ஜி. சுரேஷ், பனைக்கோடு. (14) கே. இராசப்பன், கருவலூர். (15) வி. சரவணன், பொட்டல்புதூர்.

(16) வி. எம். ரவிசங்கர், கோட்டைமேடு. (17) ஜி. வசந்தா, திருநாவலூர். (18) கே. கஜலட்சுமி, விருதுநகர். (19) எ. உமா மகேஸ்வரி, வாக்கல். (20) பி. வெங்கடேசன், வடக்கு நத்தம்.

(21) மு. கோபால், நாமக்கல். (22) அ. மகேஷ், புலியங்குடி. (23) எஸ். பிரேமா, குடந்தைகோணம். (24) பி. ஜெயகாந்த், கொல்லப்பட்டி. (25) ஜே. பால்ஸின் ஷீலா, சென்னை-94.

ராணி பிரைவேட் சார்பில் அச்சிட்டு வெளியிட்டவர்: பி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ. மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

Open the School

பள்ளிக்கூடம் திறந்தாச்சு!



பள்ளிக் கூடம் திறந்தாச்சு
படிப்பில் நினைப்பு வந்தாச்சு
துள்ளல் ஆட்டம் விட்டாச்சு
துடுக்கை அடக்கி நின்றாச்சு!

வேனல் வெயிலில் அலைந்திட்ட
வெட்டிப் பொழுது போயாச்சு
நானும் எனது நண்பர்களும்
நல்ல பிள்ளைகள் ஆயாச்சு!

புதிய வகுப்புக்குப் போயாச்சு
புத்தகம் வாங்கிப் பார்த்தாச்சு
புதிய மனசும் வந்தாச்சு
புத்தி தெளிந்து வளர்ந்தாச்சு!

நன்றாய்ப் படித்து முன்னவனாய்
நல்ல மார்க்கு வாங்கிடுவேன்
குன்றாப் புகழைப் பெற்றோர்க்குக்
கொடுத்து மகிழச் செய்திடுவேன்!

—நல்லைக்கவி அ. இளங்கோவன்

பரிசு பெற்ற படங்கள்!

எம். பிரான்சிஸ்,
தருவைகுளம்.

வி. முருகேசன்,
பெரம்பலூர்.



பி. சண்முகப்பிரியா
சென்னை-90.



பி. கந்தசாமி,
நத்தப்பாளையம்.

RANI COMICS
TAMIL FORTNIGHTLY

Regd. No. TN/MS (N)/461
Registered as Newspaper in Sri Lanka

முகமூடி வீரர்

மாயாவி

தோன்றும்

அதிரடிப் பெண்

ஆழ்கடலுக்குள் நடக்கும் மர்மக் கொள்ளைகளை
அம்பலப்படுத்துகிறார், மாயாவி!

ஜூலை 16-ந்தேதி வெளிவருகிறது.
பயங்கர சண்டைகள் நிறைந்த மர்மப் படக்கதை!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.